# முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா; 5-00

முரசு 06 ஒலி 223 ஆங்கீரச ஆடி 1 (16.07.1992) வியாழன்


## திருமலை முஸ்லிம்கள் அடாவடி
## மதம் மாற மறுப்பு
## 3 தமிழ் பெண்கள் கடத்தல்!

திருகோணமலையில் தம்பலகாமம் சிவன் கோவிலடி அகதி முகாமிலிருந்து 3 தமிழ் பெண்கள் முஸ்லிம் குழுவொன்றினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர் நேற்று முன்தினம் நடைபெற்ற இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது; இந்த அகதி முகாமிலிருந்த தமிழ் மக்களை முஸ்லிம்களாக மதம் மாறுமாறு முஸ்லிம் வன்முறைக் குழுவொன்று அடிக்கடி நிர்ப்பந்தித்து வந்தது. இதற்கு தமிழ் மக்கள் மறுத்து விட்டனர்

— 04ஆம் பக்கம் பார்க்க

# கிளாலித் துறைமுகம் பகுதியில்
# அவ்ரோ விமானம் குண்டுவீச்சு!

## உயிர், பொருள் சேதம் இல்லை

கிளாலிதுறைமுகப்பகுதியில் நேற்று நண்பகல் அவ்ரோ விமானம் ஒன்று வட்டமிட்டு குண்டுகளை வீசியது, அங்கு நின்ற பயணிகள்படகுகளை இலக்கு வைத்தே இக் குண்டுகள் வீசப்பட்டன. எனினும் சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை,

நேற்று நண்பகல் 12. 30 மணியளவில் கிளாலிப்பகுதியை சுற்றி வட்டமிட்ட அவ்ரோவிமானம் ஒன்று அங்கு நின்ற படகுகளை நோக்கி 5 குண்டுகளை வீசியது;

இவ்வாறு வீசப்பட்ட குண்டுகளினால் உயிர்ச்சேதமோ, பொருள் சேதமோ ஏற்படவில்லை, மூன்று குண்டுகள் கடலினுள் வீழ்ந்து வெடித்தன பயணத்திற்காக காத்திருந்த மக்களும் அவ்வூர் வாசிகளும் பீதியினால் நாலாபுறமும் சித

— 04ஆம் பக்கம் பார்க்க

## 19 லொறிகளில் ம. எண்ணெய் கிளிநொச்சி வரை வந்தது

யாழ். குடாநாட்டிற்கென கொழும்பில் இருந்து 19 லொறிகளில் மண்ணெண் கிளிநொச்சி வரை எடுத்து வரப்பட்டிருப்பதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவித்தன,

இந்த மண்ணெண்ணெய் பரல்களை யாழ்ப்பாணம் கொண்டு வருவதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவை இங்கு வந்தால் மண்ணெண்ணெய் தட்டுப்பாடு ஓரளவு நீங்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது 47

## கோண்டாவில் செயலகத்தில் பத்துப்பேர் விடுவிப்பு

பல தரப்பட்ட சமூகவிரோத குற்றச் சாட்டுகளின் பேரில் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டு சுமார் ஒன்றரை வருடங்களாக தடுத்து வைக்கப்பட்ட பத்துப் பேர் நேற்று அவர்களின் பெற்றோர் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்

கோண்டாவிலில் உள்ள விடுதலைப்புலிகளின் தலைமைச் செயலகத்தில் வைத்து இவர்கள் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்கள் கிளிநொச்சி தீவுப்பகுதி, வலிகாமம் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

இவர்களில் சிலர் இந்திய இராணுவம் இருந்த காலத்தில் அவர்களுக்கு ஒத்துழைத்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## பஸ்ஸில் சென்ற 19 முஸ்லிம்கள் கிரான்குளத்தில் கொலை!

மட்டக்களப்பில் நேற்றுக் காலை தனியார் மினிபஸ் வண்டியில் பயணம் செய்த 19 முஸ்லீம்கள் இனந்தெரியாத ஆயுதக்கும்பல் ஒன்றினால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

சுமார் 10 பேர் இயந்திரத் துப்பாக்கிகள் சகிதம் வந்து பஸ்ஸை மறித்து இப்படுகொலையை நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது

சம்பவம் நடைபெற்ற இடமான கிரான் குளத்திலிருந்து மூன்று மைல் தொலைவில் தன் முருக்கன் மடம் இராணுவ முகாம் உள்ளது.

நேற்று படையினரின் கடமை மாற்றம் நிகழ் எனவும் படையினரின் கடமை மாற்றம் நிகழ்ந்துகொண்டிருந்த சமயமே இந்த 19 முஸ்லிம்களும் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது

★ பி. ஜே. பி. எம். பி, சபையில் குற்றச்சாட்டு

## புலிகள் விடயத்தில் இந்தியா இரு போக்கு கொண்டுள்ளது

விடுதலைப் புலிகள் தொடர்பான இந்திய மத்திய அரசின் நிலைப்பாடு முன்னுக்குப்பின் முரணாக இருப்பதாக பாரதிய ஜனதாக் கட்சி எம். பி துலைவன்சிங் நேற்று இந்திய பாராளுமன்றத்தில் கண்டனம் தெரிவித்தார்.

காங்கிரஸ் அரசின் பல கொள்கைகளை காரசாரமாக கண்டித்து உரையாற்றிய ஜலவன்சிங் புலிகள் தொடர்பான மத்திய அரசின் கொள்கை முன்னுக்கு பின் முரணாக இருமனப் போக்குடையதாக இருக்கிறது என்று குற்றஞ் சாட்டினார்.

இந்திய உள்துறையமைச்சர் எஸ். பி சவான் உரையாற்றிய போது புலிகள் தொடர்பாக இந்தியாவின் கருத்து நிலையில் எம்மாற்றமும் இல்லை என்று குறிப்பிட்டார்

புலிகளின் தலைவர் பிரபாகரனை நாடு கடத்த ஸ்ரீலங்கா அரசு ஒத்துழைக்கும் எனவும் சவான் அப்போது நம்பிக்கை வெளியிட்டார்,

## கடற்படை தாக்கு

நேற்று நண்பகல் 2 மணியளவில் கடற்படையினர் படகில் இருந்து பொன்னாலை, திரு

04ஆம் பக்கம் பார்க்க

## பீரங்கிபடகு தாக்குதல்

மண்டைதீவு கடலில் நிலை கொண்டுள்ள பீரங்கிப்படகுகள் நேற்று பிற்பகல் பீரங்கித் தாக்குதல்களை நடத்தின, கலிபர் தாக்குதல்களும் இடம்பெற்றன.

## வீரச்சாவு

புல்லாவெளிப் பகுதியில் கடந்த 5 ஆம் திகதி இடம்பெற்ற மோதலில் காயம் பட்டு சிகிச்சை பெற்று வந்த கீத் (சுணசோரம், நாகேந்திரம்- சரியான)நேற்று முன்தினம் வீரச்சாவு எய்தினார்.

★ கப்பலால் இறக்கப்பட்ட சம்பவம்

## பாதுகாப்பு அமைச்சுக்கு அரச அதிபர் முறையீடு

நேற்று முன்தினம் கொழும்பு செல்ல கப்பலில் ஏறிய பின்பு அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் கப்பலால் இறக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக அரச அதிபர் நேற்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு முறையிட்டுள்ளார்.

இதுவரை காலமும் அரசாங்க அதிபர் என்ற ரீதியில் கப்ப

— 04ஆம் பக்கம் பார்க்க

## அரச அதிபருக்கு ஏற்கனவே கப்பலில் செல்ல அனுமதி

யாழ் அரசாங்க அதிபருக்கும் கல்விப்பணிப்பாளருக்கும் கப்பலில் கொழும்பு செல்ல ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டிருந்ததாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால் நேற்று முன்தினம் மேலும் இருவர் அனுமதியின்றி இவர்களுடன் கப்பலில் பயணம் செய்ய வந்ததாகவும் இதனால் தான் அரச அதிபரும், கல்விப் பணிப்பாள

— 04ஆம் பக்கம் பார்க்க

## இன்று மாலை 3 மணிவரை கடிதங்களை சேர்க்கலாம்

யாழ் பிரதம தபாற்கந்தோரில் நேற்று மக்கள் நீண்ட வரிசையில் நின்று கடிதங்களை பதிவு செய்வதிலும் முத்திரைகள் வாங்குவதிலும் ஈடுபட்டனர்.

நாளை வெள்ளி காலை குமண கப்பலில் வெளியூர்த் தபால்கள் செல்லவிருப்பதால் இன்று மாலை 3 மணிவரையும் வெளியூர்த் தபால்களை யாழ் பிரதம தபாற் கந்தோர் பெட்டிகளில் போடலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது,

## பரீட்சை ஆணையாளருடன் பணிப்பாளர் தொடர்பு

எதிர்வரும் க. பொ, த. உயர் தர பரீட்சை வினாத்தாள்களையும், மற்றும் ஆவணங்களையும் உடனடியாக கப்பல் மூலம் அனுப்பிவைக்குமாறு யாழ் கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் பரீட்சை ஆணையாளரை வானொலிச் செய்தி மூலம் கேட்டுள்ளார்.

இங்குள்ள தனியார் தொண்டர் நிறுவனம் ஒன்றின் மூலம் இச்செய்தி அனுப்பிவைக்கப்பட்டது.

பரீட்சை வினாத்தாள்களை எடுப்பதற்கு கொழும்பு வரவேண்டும் என்றால் கப்பலில் பயணம் செய்ய கூட்டுப்படை தலைமையகத்தின் அனுமதியை பெற்றுத்தருமாறும் பரீட்சை ஆணையாளரை கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார், 47

## க. பொ. த. உயர்தர பரீட்சை ஆகஸ்ட்டில் நடைபெறுமா?

யாழ். கல்விப்பணிப்பாளர் க. பொ. த. உயர்தரப்பரீட்சை தொடர்பாக கப்பலில் கொழும்பு செல்ல அனுமதி மறுக்கப்பட்டதையடுத்து இப்பரீட்சையை எதிர்நோக்கும் மாணவர்கள் மத்தியில் அதிருப்தி நிலை ஏற்பட்டுள்ளது

ஏற்கனவே விசேட பரீட்சை புள்ளிகளை பல்கலைக்கழக அனுமதிக்கு வேறாக அரசு கணித்துள்ளதால் இந்தப் பரீட்சையையும் நடத்தாது தடுக்கும் முயற்சியாகவே பணிப்பாளருக்கு அனுமதி மறுக்கப்பட்ட சம்பவம் எடுத்துக்காட்டுவதாக கல்விமான்கள் தெரிவிக்கின்றனர்.

க. பொ. த உயர்தர பரீட்சை நாடு முழுவதும்

04ஆம் பக்கம் பார்க்க

★ பொருளியலாளர்களின் கணிப்பு

# பாதுகாப்பு வரி அதிகரிப்பால் வாழ்க்கைச் செலவு உயர்கிறது!

பாதுகாப்புச் செலவின வரி விதிப்பையடுத்து நாட்டில் வாழ்க்கைச்செலவு கடந்த சில மாதங்களாக அதிகரித்துள்ளதாக கொழும்பின் பொருளியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு-கிழக்கு யுத்தத்தினால் அதிகரித்து வரும் பாதுகாப்புச் செலவினத்தை ஓரளவிற்கு ஈடு செய்யும் பொருட்டு அரச பாதுகாப்பு வரியை ஒரு சத வீதத்திலிருந்து மூன்று சத வீதமாக அண்மையில் அதிகரித்ததைத் தொடர்ந்தே பொருள்களின் விலைகளில் திடீர் அதிகரிப்பு ஏற்பட்டு வருவதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கடந்த மாத வாழ்க்கைச் செலவுப் புள்ளி வெகுவாக அதிகரித்துள்ளதையும் ஆய்வாளர்கள் தமது வாதத்திற்கு ஆதாரமாகக் காட்டியுள்ளனர். 16

## சட்டி, பானை வாங்கக்கூட மக்களிடம் பணமில்லை

### - தினேஷ் எம்.பி.

''இந்த அரசாங்கத்தில் மக்கள் சட்டி, பானை வாங்கக் கூடப் பணமில்லை'' என்று தினேஷ் குணவர்த்தன எம்.பி. பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினார்.

பசறை தென்னக்கோன் (சு.க. எம்.பி.) பேசுகையில், வெள்ளம் வந்தால் படகில் தான் பாராளுமன்றத்துக்கு வரவேண்டியுள்ளது பாராளுமன்றக் கட்டிடத்தையே ஒழுங்காக அமைக்க முடியாத அரசா நாட்டை ஒழுங்காக நிர்வகிக்கப் போகிறது? என்றார்.

## கடவுச் சீட்டுக்களில் புதிய அளவிலான புகைப்படம்

குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் இயந்திரத்தினால் வாசிக்கத்தக்க, சர்வதேச சிவில் விமான போக்குவரத்து ஸ்தாபனத்தால் அனுமதிக்கப்பட்ட பரிமாணங்களுக்கமைய புதிய கடவுச் சீட்டுக்களை நடைமுறைப் படுத்தியுள்ளது.

இந்த புதிய தொடர் கடவுச் சீட்டுகள் 4.5 செ.மீ.× 3.5செ.மீ அளவுடைய புகைப் படங்களை யுடையதாகவே இருக்கும்.

முன்னர் கடவுச்சீட்டுக்களில் 6 செ.மீ.× 4.5 செ.மீ அளவுடைய புகைப்படங்களே ஒட்டப்பட்டு வந்தன.

நேற்று யூலை மாதம் 15 ஆம் திகதி முதல் கடவுச் சீட்டுக்கு விண்ணப்பிப்போர் புதிய அளவிலான புகைப் படங்களையே தமது விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டுமெனவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

## இந்திய இராணுவம் சுட்டு காஷ்மீரில் 31 பேர் பலி!

காஷ்மீரில் பழிவாங்கும் நோக்குடன் இந்திய இராணுவம் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் 31 பேர் கொல்லப்பட்டனர் நேற்று முன்தினம் இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை இந்திய இராணுவத்தின் மீது காஷ்மீர் முஸ்லிம் தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலுக்கு பழிவாங்கும் வகையிலேயே இச் சூடு இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஒலிம்பிக் விழாவுக்கு இந்திய மல்யுத்த வீரர்கள்

பார்ஸிலோனாவில் ஒலிம்பிக் விளையாட்டு விழா இம் மாதம் 25 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்தியா 84 உறுப்பினர்கள் கொண்ட குழுவொன்றை இந்த விளையாட்டு விழாவுக்கு அனுப்பவுள்ளது.

இவர்களில் எழுவர் குத்துச் சண்டை வீரர்கள், அத்துடன் 8 மல்யுத்த வீரர்கள், ஐந்து வில்வித்தை வீரர்கள், நான்கு எடை தூக்குவோர் ஆகியோரும் இவ் அணியில் அங்கம் வகிக்கின்றனர்.


''சிக்கன முறையில் சிறந்த போஷாக்கு''

**கண்காட்சி**

இடம்; சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி

காலம்: 17 - 07 - 92 வெள்ளிக்கிழமை

18 - 07 - 92 சனிக்கிழமை

நேரம்: காலை 9 மணி தொடக்கம்

மாலை 5 மணி வரை

**மில்க்வைற் காட்சிச் சாலைக்கு**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

சிறுடைகளையும் ஏனைய உடைகளையும் சீராகவும் துரிதமாகவும் சலவை செய்ய

**மில்க்வைற் சலவைத் தூள்**

300 கிராம் கொண்ட போத்தல்

சகாய விலை ரூபா 35/- மட்டும்

வாங்குவோர்களுக்கு போஷாக்கு மிக்க அகத்திக் கன்று, கீரை விதை அன்பளிப்பு

07042


## 120 அம்புலன்ஸ் வண்டிகள் இறக்குமதி

ஆஸ்பத்திரிகளுக்கு வழங்குவதற்காக சுகாதாரத் திணைக்களம் 750 இலட்சம் ரூபா செலவில் 120 அம்புலன்ஸ் வண்டிகளை இறக்குமதி செய்துள்ளது.

இவற்றில் முதல் தொகுதியாகக் கிடைக்கப்பெற்ற 80 அம்புலன்ஸ் வண்டிகளும் கஷ்டப்பிரதேச கிராமப்புற ஆஸ்பத்திரிகளுக்கு வழங்கப்படவுள்ளன.

## விளையாட்டு விழா

வட்டுக்கோட்டை ராஜன் கதிர்காமர் பொதுப்பணி மன்றம் நடாத்தும் மாபெரும் விளையாட்டு விழா ஒன்றினை இம் மாதம் 18 ஆம் திகதி சனிக்கிழமை அராலி வள்ளியம்மை ஞானமூர்த்தி வித்தியாலயத்தில் கழகத் தலைவர் தலைமையில் நடாத்தவுள்ளது. (18)

## மகாமாரிஅம்மன் உற்சவம்

அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் சனிக்கிழமை காலை 11.15 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

இம் மாதம் 31 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், அடுத்த மாதம் முதலாம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும். 47


## சிறுவிளம்பரம்

### புலமைப்பரிசில் பரீட்சை

1992 (வி) உட்பட கடந்த கால வினாவிடை விற்பனையாகிறது. O/L. A/L கடந்த கால வினாவிடை விற்பனையாகிறது அறிவகம், 374 மணிக்கூட்டுவீதி யாழ்ப்பாணம். 07039

### யந்திரம்

சகல தெய்வங்களுக்குரிய யந்திரங்களும் வியாபார வசியம் செல்வச் செழிப்பு கண்ணூறு நாவூறு போன்றவற்றிற்குரிய எல்லா விதமான யந்திரங்களும் எம்மிடம் பெறலாம், ஸ்ரீ சக்தி கணேஷ உபாசகர் ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம், 96 கோவில் வீதி.(ஸ்ரீ கைலாச பிள்ளையார் கோவில் சந்தி) நல்லூர். 07043


## பதவி விலகல் குறித்து யாழ். செ. கிளை விளக்கம்

''வேலையின்மை, வறுமை, அரைப்பட்டினி நிலை போன்ற பல பிரச்சினைகளை நாம் எதிர் கொள்ளவேண்டியுள்ளது. இச் சூழலை எதிர் கொள்வதற்காக இ.செ.ச. சங்க யாழ் கிளை தலைமையகம் வழிமுறைகளைக் கையாண்டபோதும் மிக வரையறுக்கப்பட்டவையான உதவியே தேசிய செஞ்சிலுவைச்சங்க தலைமையகம் (கொழும்பு) சர்வதேச செஞ்சிலுவைக்குழு, சர்வதேச செஞ்சிலுவை செம்பிறைச் சம்மேளனம் என்பவற்றால் எமக்கு வழங்கப்பட்டன என்பது மிகத் துக்ககரமான உண்மையாகும்''

மேற்கண்டவாறு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை பதவிவிலகல் குறித்து இ.செ.சி. சங்கத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள விளக்கக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்வரும் விடயங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

தேசிய தலைமையகம், கிளை அபிவிருத்திக்கான வசதிகளை வழங்குவதிலிருந்தும் ஊக்குவிப்பதிலிருந்தும் தவறிவிட்டது. இன்றைய அனர்த்தத்தை நாம் எதிர் கொள்ளும் இவ் வேளையில் மேற்கொள்ளப்படாத கிளை அபிவிருத்தி வேறெவ் வேளையிலும் பயனளிக்கப் போவதில்லை.

தொடர் இராணுவ நடவடிக்கை நாட்டின் பேரழிவாகும். அவை தொடர்பு என்பவற்றில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. இப்பாரிய விளைவுகள் பற்றி பலமுறை எம்மால் தங்களுக்கு எடுத்துரைக்கப்பட்டபோதும் இ.செ.சி.சங்க தேசிய தலைமையகமோ, சர்வதேச செஞ்சிலுவை செம்பிறைச் சம்மேளனமோ, சர்வதேச செஞ்சிலுவைக் குழுவோ இப்பிரச்சினைக்கு முன்னுரிமை எதுவும் வழங்கவில்லை. ஓராண்டுக்கு முன் எமது ஆரம்ப சுகாதார கல்வி நிகழ்ச்சிக்கென ஒதுக்கப்பட்ட ஒரு ஒளி குவி உபகரணம் கூட (Over-Head Projector) தங்களது ஒத்துழைப்பின்மையால் இது வரை எமக்குக் கிடைக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கிளை நிறைவேற்றுக்குழுவின் இரண்டுமாத செயற்பாட்டிற்கான ஒரு பீப்பாய் பெற்றோலை கப்பலூடாக அனுப்புமாறு நாம் கோரி வந்தோம். இதனை நாம் இது வரை பெற்றுக்கொள்ளாத அதே வேளையில் பல அரச அரச, சார்பற்ற நிறுவனங்கள் பல பீப்பாய் பெற்றோலை ஒவ்வொரு மாதமும் கப்பலூடாக இங்கு கொண்டு வருகின்றன

அவசர தேவைக்கான உணவு, மருந்து, தண்ணீர்வலை, பெரியளவிலான கூடாரங்கள் என்பன எமக்கு வழங்கப் படாமையால். இடம் பெயர்ந்த மக்களுக்கான அடிப்படைத் தேவைகளைக் கூட எம்மால் பூர்த்தி செய்ய முடியாதுள்ளது.

இடம்பெயர்ந்த மீனவ மக்கள், நிவாரணத்தில் தங்கியிராமல் தம் சொந்த வாழ்வாதாரத்தை தாமே உழைக்கக் கூடிய வகையில், 9600 குடும்பங்களுக்கு உதவக் கூடிய ஒரு திட்டம் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டபோது 3200 குடும்பங்களுக்கு மட்டுமே வலைகளையும் தூண்டில்களையும் வழங்குவதற்கு சர்வதேச செஞ்சிலுவைக்குழு மிகவும் சிரமப்பட்டு ஒத்துக் கொண்டது.

## வெரித்தாஸ் தமிழ்ப் பணிக்கு 15 வருடங்கள் நிறைவு

பிலிப்பைன்ஸின் தலைநகர் மணிலாவில் இருந்து ஒலிபரப்பாகும் வெரித்தாஸ் வானொலியில் தமிழ் நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டு 15 வருடங்கள் நிறைவுற்றுள்ளன.

வெரித்தாஸ் வானொலியின் 15 மொழி ஒலிபரப்புக்களின் மடல்களில் 'தமிழ்ப் பணி' கடந்த வருடம் முதல் இடம்பெற்று வருகிறது.

வெரித்தாஸ் தமிழ்ப்பணிப் பொறுப்பாளராகச் செபாவும், சக தயாரிப்பாளர்களாக றைசெல், அருட்சகோதரி செல்கிடுனா ஆகியோரும் தற்பொழுது பணிபுரிந்து வருகின்றனர்.

வெரித்தாஸ் தமிழ்ப் பணியின் இவ் வருட சிறந்த நேயர்களாக ஒந்தச்சி மடத்தைச் சேர்ந்த வி. சந்திரகுமாரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இவரைத் தவிர தமிழகம், அபுதாபி, அந்தமான், பர்மா ஆகிய இடங்களைச் சேர்ந்த மேலும் ஐவரும் சிறந்த நேயர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். 16

## 'சமாதானத்திற்கான சாத்தியம் குறைகிறது'

வடகிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் சாத்தியம் மீதுள்ள நம்பிக்கையை இருதரப்பாரும் கைவிட்டிருப்பதும் இராணுவ ரீதியில் வெற்றி காண்பதில் உறுதி பூண்டிருப்பதும் இப்போது தென்படுவது குறித்து இலங்கைத் தேசிய கிறிஸ்தவ மன்றம் வியப்பும் கவலையும் தெரிவித்துள்ளது.

சாத்தியமாகக்கூடிய எந்த ஒரு நிரந்தரத் தீர்வையும் பின்னடையச் செய்வதாகவே இதைக் கருதும் இம்மன்றம் இந்த ஆபத்தான வேளையில் அப்பாவிப் பொதுமக்களுக்கு போர் ஏற்படுத்தும் இன்னல்கள் குறித்து கவலை கொண்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

இந்நிலைமையைக் கருத்திற் கொண்டு இலங்கைத் தேசிய கிறிஸ்தவ மன்றம் அதன் சமீபத்திய கூட்டத்தில் அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் அவசர வேண்டுகோள் விடுப்பதெனத் தீர்மானித்துள்ளது.

## மத்திய அரசு எச்சரிக்கை

அயோத்தியிலுள்ள 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புராதன பள்ளிவாசலைப் பாதுகாப்பதற்கு மாநில அரசாங்கம் தவறினால் அது பதவி நீக்கப்படுமென இந்திய மத்திய அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்திய மத்திய அரசு அண்மைக்காலத்தில் மாநில அரசு ஒன்றுக்கு விடுத்த கடும் எச்சரிக்கையாக இது கருதப்படுகின்றது.

இதேவேளை உத்தர பிரதேஷ் மாநில அரசு கலைக்கப்பட்டால் இந்திய அரசு பெரும் நெருக்கடியை எதிர் நோக்கவேண்டுமென பாரதிய ஜனதாக்கட்சி கூறியுள்ளது.

யாழ்ப்பாணம்



# இந்திராவை சூனியக்காரி என்ற கவிதைக்கு சாகித்தியப் பரிசு

முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியை சூனியக்காரி என்றும், அவரை சுட்டுக்கொன்ற வீரர்களை புகழ்ந்தும் எழுதப்பட்ட கவிதையை உள்ளடக்கிய கவிதைத் தொகுதி நூலுக்கு கடந்த வருட இந்திய சாகித்திய பரிசு வழங்கப்பட்டுள்ளது.

'ஜனக் பிரத்' என்னும் கவிதைத் தொகுதியிலேயே இக்கவிதையும் இடம் பெற்றுள்ளன.

'ஜனக் பிரத்' கவிதைத் தொகுதியை வெளியிட்ட பிரபல பஞ்சாப் கவிஞர் ஹரித்திரசிங் என்பவரே சாகித்திய பரிசுக்கு இந்திய அரசால் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

# சாமிமலைக் கொள்ளை முயற்சி; இரு இராணுவத்தினர் கைது!

மஸ்கெலிய பகுதியிலுள்ள சாமிமலை நகரில் இடம்பெற்ற கொள்ளை முயற்சி தொடர்பாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் இருவர் இராணுவ சிப்பாய்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் இருவரும் கடந்த ஒரு மாதகாலமாக கடமைக்குச் செல்லாது இருந்து வந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கிரனைட் வீசிவிட்டு கொள்ளையடிக்க எடுக்கப்பட்ட இம் முயற்சி முறியடிக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

# ஒரு இலட்சம் பற்றறிகள் முகத்துவாரத்தில் சிக்கின

யாழ்ப்பாணத்திற்கு கடத்தி வருவதற்காக வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் ஒரு இலட்சம் ரோச் பற்றறிகள் முகத்துவாரம் பகுதியில் வைத்துக் கைப்பற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இந்த பற்றறிகளுடன் ஐயாயிரம் கற்பூரப் பக்கட்டுக்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவை இரண்டு லொறிகளில் ஏற்றப்பட்டிருந்த சமயமே பொலிஸாரால் நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்டதாகவும் இது தொடர்பாக மூன்று யாழ் தமிழ் இளைஞர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# கிரானகுளத்தில் 15 பயணிகளுடன் மினிபஸ் கடத்தல்!

மட்டக்களப்பிலிருந்து - களுவாஞ்சிக்குடி முனையை நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ் வண்டியொன்று அதில் பயணம் செய்த 15 பயணிகளுடன் கிரான்குளம் என்ற இடத்தில் வைத்து ஆயுதம் தாங்கியோரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

கடந்த திங்கட்கிழமை பிற்பகல் இரண்டு மணியளவில் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

அந்த பஸ்ஸில் காரைதீவுக்கு யாரும் பயணம் செய்கிறார்களா எனக் கேட்ட பின்னரேயே பஸ் கடத்திச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## கதிர்காமத்தில் அதிக யாத்திரிகர்கள்

கதிர்காமக் கந்தன் ஆலய தீர்த்த உற்சவம் நேற்று நடைபெற்றது.

கதிர்காம உற்சவத்தில் இம்முறை வழமையை விட அதிகமான பக்தர்கள் கலந்து கொண்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# 'லண்டன்சண்' கௌரவ ஆசிரியராக 13 வயது தமிழ்ச் சிறுவன்

'லண்டன்சண்' பத்திரிகையின் கௌரவ ஆசிரியராக தமிழர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அவருக்கு வயது 13 மட்டுமே. 13 வயதில் பட்டதாரியான கணேஷ் சிற்றம்பலம் என்ற தமிழ்ச் சிறுவனுக்கே இந்த அதிகௌரவம் வழங்கப்பட்டுள்ளது.

'லண்டன்சண்' பத்திரிகையே பிரிட்டனில் அதிகமாக விற்பனையாகும் ஆங்கிலத் தினசரியாகும்.

இந்தச் சின்னஞ் சிறிய வயதில் தாயகணிதத்தில் சிறப்புப் பிரிவில் முதல்தர சித்தியடைந்து கல்வி உலகை பெரும் வியப்பில் ஆழ்த்தி, உலகில் அதிகுறைந்த வயதில் பட்டதாரியானவர். பிரிட்டனின் மிகவும் வயதில் இளைய பல்கலைக்கழக பட்டதாரி என்ற பெருமையினைப் பெற்ற இச்சிறுவன் வடபகுதியைத் தாயகமாகக் கொண்டவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவரின் கல்வி ஆற்றலைக் கௌரவிக்கும் முகமாகவே அப்பத்திரிகையை வெளியிடும் 'நியூஸ் இன்ரநாஷனல்' நிறுவனம் இந்த கௌரவப் பதவியை வழங்கியுள்ளது.

'சண்' இன் ஆசிரிய பீடத்தைச் சுற்றி ஆற்றல் மிகு மூளைசாலிகள் இருப்பதன் மூலம் ஒரு மாற்றம் தோன்றுமென்று நியூஸ் இன்ரநாஷனல் நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

'சண்' பத்திரிகையின் தினசரி விற்பனை 35 இலட்சம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கணேஷ் சிற்றம்பலம் பிரசித்திபெற்ற லண்டன் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்திலேயே படித்துப் பட்டதாரியாகியுள்ளார்.

★ 'வை-8' சம்பவம்

# விமானத்திலோ, அதிகாரிகளிலோ தவறு இல்லை! பிரதமர் அறிவிப்பு

இயக்கச்சியில் வீழ்ந்த 'வை-8' விமானம் புறப்படும்போது மிகவும் அவதானமாகப் பரிசோதனை செய்யப்பட்டது. எந்த அதிகாரியினதோ, உத்தியோகத்தினரதோ கவலையீனத்திற்கு விமானம் இரையாகவில்லை.

இவ்வாறு பிரதமர் டி. பி. விஜயதுங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சபை ஒத்திவைப்பு வேளையில் கொழும்பு மாவட்டச் சுதந்திரக்கட்சி எம். பி. நிமால் சிறிபால டி சில்வா எழுப்பிய கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையிலேயே பிரதமர் இவ்வாறு கூறினார்.

பிரதமரின் இக் கூற்று விடுதலைப் புலிகளால் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது என்பதனை மறைமுகமாக மறுதலிப்பதாகவே அமைகிறது என்று கொழும்பில் அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர்.

## வாஞ்சியின் 'நெருப்பு மழை'

கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதனின் 'நெருப்பு மழை' கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா எதிர்வரும் 21 ஆம் திகதி பிற்பகல் நான்கு மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்த்தாய் பதிப்பக வெளிவரும் 'நெருப்பு மழை' யின் வெளியீட்டு விழாவில் விடுதலைப்புலிகள் இயக்க யாழ். மாவட்டத் தளபதி செல்வராஜா, யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பரிதி, மூத்த உறுப்பினர் இளங்குமரன், 'நிதர்சனம்' பொறுப்பாளர் பரதன், கலைபண்பாட்டுக் கழகப்பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

சின்னமணி குழுவினரின் 'போர் முனையில் நெருப்பு மழை' வில்லிசையும் இடம் பெறவுள்ளது.

## ஸ்ரான்லி வெற்றி பெற்றது

மேஜர் முரளி ஞாபகார்த்தமாக நடைபெற்றுவரும் விளையாட்டுப் போட்டிகளில் ஓர் அங்கமாக நடைபெறும் உதைபந்தாட்ட போட்டித் தொடரில் நேற்று முன்தினம் யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற போட்டியில் ஸ்ரான்லிக் கல்லூரி அணி யாழ் மத்தியகல்லூரி அணியை 4: 1 என்ற கோல்கள் கணக்கில் தோற்கடித்தது. (16)

## அரியாலை அணி வெற்றி பெற்றது

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவினுள் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி கடந்த 13 ஆம் 14 ஆம் திகதிகளில் யாழ் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இப் போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம் ஆண், பெண் இரு பிரிவுகளிலும் முதலாம் இடத்தைப் பெற்றது. (16)

## தென்மராட்சியில் தடகள விழா

தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவு தடகள விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 18, 19 ஆம் திகதிகளில், மட்டுவில் மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில், நடைபெறவுள்ளது. (16)

# கடைசி நேரத்தில் கடமைக்கு அழைக்கப்பட்டவரும் பலி!

விடுதலைப்புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட வை- 8 விமானத்தில் சென்ற பிளைட் லெப்டினன்டான சுரேஷ் மெண்டிஸுக்கு சம்பவதினம் 'டியூட்டி' இல்லையாம். அன்று கடமைக்குச் செல்ல வேண்டிய ஒருவர் திடீரென லீவில் சென்றதால் தொலைபேசி மூலம் கடைசி நேரத்தில் இவர் கடமைக்கு அழைக்கப்பட்டாராம்.

இத் தகவல்களை அவரது மனைவியான மொறட்டுவையைச் சேர்ந்த ஹாசனி வெளியிட்டுள்ளார்.

# ஆடிவேலை முன்னிட்டு காலி வீதி போக்குவரத்தில் கட்டுப்பாடு

ஆடிவேல் உற்சவத்தை முன்னிட்டு கொழும்பு நகர்ப்பகுதில் காலி வீதியில் வாகனப்போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்றும், இன்றும் காலை 9 மணி முதல் பகல் ஒரு மணிவரை இப் பகுதியில் வாகனப் போக்குவரத்தை தவிர்க்குமாறும் பொலிஸார் கேட்டுள்ளனர்.

# பாதுகாப்பான சிறைக்கு சுவிஸ் பிரஜை மாற்றம்

ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்ட சுவிஸ் பிரஜை நீர்கொழும்பின் பாதுகாப்பான சிறைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

எல்லையிலுள்ள வீடொன்றில் ஒரு தொகை ஆயுதங்களுடன் சில மாதங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டு இதுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அலன் கிறிஸரின் என்பவரின் பாதுகாப்பே அதிகரிக்கப்பட்டுள்ளது.

முன்னர் இவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பகுதியில் சுவிஸ் பிரஞ்சு மொழிகளில் சூசகமாக எழுதப்பட்ட கடிதங்கள் சிறை அதிகாரிகளிடம் சிக்கியதை அடுத்தே பாதுகாப்பான சிறைப்பகுதிக்கு இவர் மாற்றப்பட்டுள்ளார்.

# தோட்டக் காணிப் பகிர்வில் பாகுபாடு எனப் புகார்

புசல்லாவ ரொச்செல் தோட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட காணிப் பகிர்வு பற்றி மலையகத்தில் கண்டனம் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது மேற்கொள்ளப்படவுள்ள குடியேற்றம் கீழ்மட்ட அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது இதன் மூலம் எதிர்காலத்தில் பல்வேறு பிரச்சினைகள் உருவாகக்கூடும். இவைகளை அந்த அதிகாரிகள் கவனத்திற் கொள்ளாது முடிவுகளைச் செயற்படுத்த முனைந்துள்ளனர் என்று இதொகா. உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

காணிப் பகிர்வை ஆட்சேபித்தும் தமக்கும் காணி வழங்கப்படவேண்டும் எனக் கோரியும் தமிழ்த் தொழிலாளர்கள் தொடர்ந்து வேலை நிறுத்தஞ் செய்து வருகின்றனர்.

# வடபகுதி உப்பள ஊழியர்களின் சம்பளத்தைப் பெறுவதில் சிக்கல்

வடபகுதி உப்புக்கூட்டுத்தாபன ஊழியர்களின் இவ் வருடத்திற்கான சம்பளத்தைப் பெறுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சி வெற்றியளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதி உப்புக்கூட்டுத்தாபன அதிகாரிகள் கடந்தவாரம் கொழும்பில் இது தொடர்பான முயற்சிகளை எடுத்தும் அவை பலனளிக்கவில்லையாம்.

இதனையடுத்து உப்புக்கூட்டுத்தாபன ஊழியர்கள் ஒன்றுகூடி தமது சம்பளத்தைப் பெறுவதற்கான முயற்சிகள் பற்றி ஆராய முடிவெடுத்துள்ளனர்.

இக் கூட்டம் எதிர் வரும் 18ஆம் திகதி காலை 9 மணிக்கு மிருசுவிலுள்ள உப்புக்கூட்டுத்தாபனத்தின் பிராந்திய அலுவலகத்தில் நடைபெறவுள்ளது என உப்புக்கூட்டுத்தாபனத்தின் வடபிராந்திய உற்பத்தி முகாமையாளர் ஸ்ரீ இராமநாதன் அறிவித்துள்ளார்.

# ஹெல உறுமய உறுப்பினர்களும் யுத்த முனை சென்றனராம

"ஹெல உறுமயைச் சேர்ந்த எட்டுப்பேர் அண்மையில் யுத்த முனைகளைச் சென்று பார்வையிட்டுள்ளனர்" என்று பாராளுமன்றத்தில் பேசுகையில் எல். எல். குணசேகர எம். பி கூறினார்.

அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அன்று நடைபெற்ற விவாதத்தின் இறுதியில் பதிலளிக்கையில், சகல எம். பிக்கள் எட்டுப்பேர் "ஹெல உறுமய" பெயரில் யுத்த முனைக்குச் சென்று பார்வையிட்டது குறிப்பிடத்தக்கது என்றார்.

# உணவுத் திட்டம் நிறுத்தம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையால் வழங்கப்பட்டு வந்த சாதாரண உணவு வழங்கல் திட்டங்களையும் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கும்படி சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுக் கிளைக்கும் சுற்று நிருபம் ஒன்று யாழ் கிளையால் அனுப்பப்பட்டுள்ளது.

இதேவேளை தற்போது அனர்த்தங்களால் இடம்பெயர்வோருக்கு முதல் மூன்று நாள் சமைத்த உணவு வழங்குவதற்கு ஏற்ற ஏற்பாடுகளை அரச சார்பற்ற நிறுவனங்களுடன் அரச நிறுவனங்களுடனும் இணைந்து செயல்படுமாறும் யாழ் கிளை கேட்டுள்ளது. 06


## நீர் வளத்தைப் பேணுவோம்

நீர் எங்கள் தனிப்பெரும் வளம்.
நீரைப் பாதுகாக்க,
மழை நீரைத் தேக்குவோம்,
குளங்கள்,
வாய்க்கால்களைப்,
புனரமைத்து,
நீர் வளத்தைப் பேணுவதற்கு,
முனைப்புடன் செயற்படுவோம்,

இன்று காலை 8.30 மணிக்கு உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சிலம்பாய் குளம் புனரமைப்புடன் இவ்வருட குளப்புனரமைப்பு வேலைகள் ஆரம்பமாகின்றன.

"ஒவ்வொரு துளி நீரையும் பயன்படுத்துவோம்"

உட்கட்டுமானப் பிரிவு,
தமிழீழ ஆய்வு நிறுவனம்,
தமிழீழ விடுதலைப்புலிகள்.

07043



வாருங்கள்

ஜே. எகட்டனின்

## ஜெசித்தாரா உணவகம்

அழைக்கிறது

ஆடிக் கூழ்
தேடிக் குடியுங்கள்

19/3, கொழும்புத்துறை சாலை,
(மகவீர் கல்லூரி முன் ஒழுங்கை)
சுண்டிக்குளி.

07045


## இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம், யாழ். கிளைத் தலைமையகம்.

## பயிற்சி நெறிகள்

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கமும் தேசிய தொழில் பயிற்றுநர் சபையும் இணைந்து சுருக்கெழுத்து, உதவித் தாதியர், எழுதுவினைஞர், வாழைநார்த் தொழில், தெங்கு பனம்பொருளுற்பத்தி, கத்தாளை நார்ப்பொருளுற்பத்தி, பிரம்புப் பொருள் உற்பத்தி, பாய் நெய்தல், தையல், தோற்பொருளுற்பத்தி, நீரிறைக்கும் இயந்திரத் திருத்துநர், மிதிவண்டி திருத்துநர், தரைத் தொழில், தச்சுத் தொழில், மட்பாண்டத் தொழில், இரும்புத் தொழில், கைத்தறித் தொழில் போன்ற துறைகளில் பயிற்சி நெறிகளை விரைவில் ஆரம்பிக்கவுள்ளன. தெரிவுபெறும் பயிலுநர்களுக்குப் பயிற்சிக் காலத்தில் மாதாந்தம் ரூபா 450/- வழங்கப்படும். இத்துறைகளில் பயில விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களை செஞ்சிலுவைச் சங்கப் பிரிவுப் பணிமனைகளில் பெற்று பூர்த்தி செய்து, பிரிவுப் பணிமனைகளூடாக 19. 07. 1992 க்கு முன் யாழ். கிளைத் தலைமையகத்திற்குக் கிடைக்கும் வண்ணம் அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
15. 07. 92

கௌரவ செயலாளர்.
07044

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் ஜங்ஷன் கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 1 -07-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

● அதிபர் சேவையில் உள்ளவர்கள்

# உதவிக்கல்விப்பணிப்பாளராக பதில் கடமையாற்ற முடியாது!

அதிபர் சேவையில் உள்ளவர்களை கல்வித்திணைக்களத்திலோ கோட்டக்கல்வி அலுவலகங்களிலோ கடமைக்காக இணைத்தல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமெனவும், ஏற்கனவே அவ்வாறு நியமிக்கப்பட்டவர்கள் உடனடியாக முன்னைய அதிபர் சேவைக்காக அனுப்பப்பட வேண்டுமெனவும் கல்வி அமைச்சு யாழ்கல்வித்திணைக்களத்திற்கு அறிவித்துள்ளது.

உதவிக் கல்விப் பணிப்பாளராகத் தற்காலிகமாகப் பதில் கடமை புரியும் எவரையும் மாகாணக் கல்வி அமைச்சினதும் கல்விச் சேவை ஆணைக்குழுவினதும் அங்கீகாரமின்றி மேற் கூறிய கடமைக்கு ஈடுபடுத்தக் கூடாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றறிக்கை மூலம் சாவகச்சேரி, வேலணை போன்ற கோட்டங்களிலும் கல்வித் திணைக்களத்திலும், விசேட கல்வித்துறையாகிய ஆங்கிலம், நடனம், சித்திரம் போன்றவற்றிற்கும் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் கடமை புரிபவர்களுக்கு மாகாணக் கல்வி அமைச்சும், கல்விச் சேவை ஆணைக்குழுவும் அங்கீகாரமளிப்பதில் சிக்கல் நிலை உருவாகியுள்ளது

கோட்டங்களில் பதில் கடமை புரிய நியமிக்கப்பட்டவர்களும், ஏனைய துறைகளுக்கு பதில் கடமை புரிய நியமிக்கப்பட்டவர்களும், தகுந்த சேவை மூப்போ, மேன்மைத் தகுதியோ பார்க்காது நியமிக்கப்பட்டுள்ளதாக ஆசிரியர் சங்கங்கள் சில முறையிட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

புதிதாகக் கல்வி நிர்வாக சேவையில் தெரிவாகியுள்ளவர்களைக் கொண்டும், பாடசாலைகளில் அதிபர்களாகக் கடமைபுரியும் கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்தவர்களைக் கொண்டும் இப்பதவிகள் நிரப்பப்பட வேண்டுமெனவும் ஏனைய வெற்றிடங்கள் தமக்கு அறிவிக்கப்பட்டு சேவைமூப்பு, தகுதி அடிப்படையில் நியமிக்கப்பட வேண்டுமெனவும் அறிவித்துள்ளதாக மாகாணக் கல்வி அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். 56

கிளாலி...

நீ ஓடினர்.

வீசப்பட்ட 5 குண்டுகளில் ஒன்று வெடிக்காத நிலையில் காணப்பட்டது. 29, 51

க. பொ. த....

ஒரே நேரம் நடைபெறும் எனவும் வேறு விசேட பரீட்சை நடைபெறாது எனவும் பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது 56, 06

கடற்படை...

வடிநிலை, மாதகல் கரைப் பகுதிகளை நோக்கி கலிபர் தாக்குதலையும், துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொண்டனர் சேத விவரம் அறியப்படவில்லை. 50

திருமலை...

...ந்த 3 தமிழ் பெண்களும் முஸ்லிம்களால் கடத்திச் செல்லப்பட்டனர்.

ஏற்கனவே பச்சநூர்பகுதியில் 250 தமிழ் மக்கள் முஸ்லிம்களின் நிர்ப்பந்தத்திற்குள்ளாகி முஸ்லிம்களாக மாறியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அரச அதிபர்...

கும் இறக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாக அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த இருவரில் ஒருவர் ஆசிரியர் எனவும், கல்விப் பணிப்பாளரின் பிரதிநிதியாக அடிக்கடி கொழும்பு சென்று வருவதாகவும் கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. 47

பாதுகாப்பு...

லில் செல்ல தமக்கு அரசாங்கம் விசேட அனுமதி வழங்கியிருந்ததாகவும் தான் அதன்படி கப்பல் மூலமாகவும் விமானம் மூலமாகவும் பல தடவைகள் கொழும்பு சென்று வந்ததாகவும் அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்

கொழும்பு செல்லவிருந்த அரசாங்க அதிபர் ஒருவர் கப்பலில் இருந்து இறக்கப்பட்ட சம்பவம் இதுவே முதல் தடவை எனவும் யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. 47

● பித்தப்பையும் அகற்றப்பட்டது

## பாப்பரசருக்கு 4 மணிநேர சத்திர சிகிச்சை

பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் நேற்று ரோம் நகர ஆஸ்பத்திரி ஒன்றில் 4 மணிநேர சத்திர சிகிச்சைக்கு உள்ளானார்.

72 வயதான பாப்பரசர் சத்திரசிகிச்சையின் பின் உடல் தேறியிருப்பதாகவும் தொடர்ந்து மருத்துவ சோதனைகள் நடைபெறுவதாகவும் வத்திகான் அரச பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்

குடலில் ஏற்பட்ட கட்டி ஒன்றை அகற்றவே இந்த சத்திர சிகிச்சை இடம்பெற்றது. இதன் போது அவரது பித்தப்பையும் அகற்றப்பட்டது.

1981 இலும் கொலையாளி ஒருவனின் துப்பாக்கிச் சூடு வயிற்றில் காயமடைந்து பாப்பரசர் சத்திரசிகிச்சைக்கு உள்ளானது குறிப்பிடத்தக்கது.

★ எழுதுவினைஞர் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள்

## செயலகம் அலைகிறார்கள்

அமைய எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் இதுவரை நியமனம் பெறாதவர்கள் தினமும் யாழ் செயலகத்துக்கு அலைந்து திரிவதைக் காண முடிகிறது

இப்பரீட்சையில் சித்தியடைந்த 304 பேரில் 145 பேருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அலைந்து திரிபவர்களில் பலர் இடம்பெயர்ந்து பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. 47

## இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு பாடசாலை அனுமதி மறுபபு

இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்து சண்டிலிப்பாய் பகுதியில் தங்கியிருக்கும் சுமார் 54 மாணவர்கள் பாடசாலை சென்று கல்வி கற்க முடியாமல் அவதிப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மருதனாமடம் கோட்டத்தில் உள்ள பாடசாலை அதிபர்கள் இந்த 54 மாணவர்களையும் தமது பாடசாலையில் சேர்த்துக் கொள்வதற்கு மறுப்பு தெரிவித்திருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் இம்மாணவர்களை வேறு பாடசாலையில் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. 47

## மேஜர் முரளி போட்டிகள்

பண்டத்தரிப்பு கோட்ட மட்டத்திலான மேஜர் முரளி ஞாபகார்த்த விளையாட்டு விழா இன்று காலை 8.30 மணிக்கு அளவெட்டி அருணோதயா கல்லூரியில் நடைபெறவுள்ளது இறுதியில் பரிசளிப்பு வைபவமும் இடம்பெறும்.

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணக் கிளைத் தலைமையலுவலகம்

## அதிர்ஷ்ட லாபச்சீட்டு

இலங்கை செஞ்சிலுவைச் சங்க பிரிவுகளில் விற்பனை செய்யப்படுகின்ற அதிர்ஷ்டலாபச் சீட்டின் குலுக்கல் திகதி 15.07.92ம் திகதியிலிருந்து 15.08.92ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றேன்,

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
15. 07. 92.

கௌரவ செயலாளர்
07046